வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

கிறிஸ்தவம்

தரம் : 06 **பகுதி I** **நேரம் : 02.00 மணி**

சுட்டெண் : .....

01. சரியான விடையைத் தெரிவு செய்க.

01. இயேசு திருமுழுக்கு பெற்ற இடம்.
(1) யோர்தான் நதி (2) கல்வாரி மலை (3) தொழுகை கூடம் (4) ஜெருசலேம்

02. இயேசு வாழ்ந்த ஊர்.
(1) ஜெருசலேம் (2) பெத்லேகம் (3) நாசரேத் (4) கலிலேயா

03. இயேசுவின் திருமுழுக்கு நிகழ்விலிருந்து வெளிப்படுவது.
(1) இயேசு இறைவனின் அன்பான மகன்
(2) தந்தையாகிய கடவுள் பூரிப்படைந்தார்
(3) தூய ஆவி புறாவடிவில் இறங்கியது
(4) மேற்கூறிய யாவும் சரி

04. தாவீதின் மகனே எனக்கு இரங்கும் என கூப்பிட்டவர்.
(1) சகேயு (2) பர்த்திமேயு (3) யோவான் (4) பேதுரு

05. இயேசு எத்தனை வயதில் திருமுழுக்கு பெற்றார்.
(1) 20 (2) 25 (3) 18 (4) 30

06. கல்லெறிந்து கொலை செய்யப்பட்ட தலைவர்.
(1) இயேசு (2) பேதுரு (3) யோவான் (4) ஸ்தோவான்

07. இயேசுவை சிலுவையில் அறைந்த இடம்.
(1) கொல்கொதா (2) பாடுகள் மலை (3) வறண்டபூமி (4) மேற்கூறிய யாவும்

08. இயேசு அன்பின் சிறப்பை உணர்த்திதி கூறிய உவமை.
(1) நல்லசமாரியன் (2) ஊதாரிமகன் (3) புதையல் (4) விதைப்பவன்

09. அனைத்து படைப்புக்களின் சிகரம்.
(1) வானம் (2) மனிதன் (3) விலங்குகள் (4) தாவரங்கள்

10. திருமுழுக்கு யோவானின் போதனையின் மையம்.
(1) மனந்திரும்புதல் (2) மீட்பு (3) அன்பு (4) திருமுழுக்கு

www.lkedu.lk

இடைவெளி நிரப்புக.

11. கடவுள் ..... மானிடரைப் படைத்தார்.
12. உன் முழு இதயத்தோடும் ..... முழு ஆற்றலோடும் முழு மனதோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு காட்டு.
13. வழிப்போக்கன் எருசலேமில் இருந்து ..... நோக்கிச் சென்றார்.
14. நீர் இறைமகன் என்றால் இந்தக்கல் ..... கட்டளையிடும்.
15. ஆதிப் பெற்றோர் ..... ஆவார்.

சுருக்கமாக விடை தருக.

16. இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனை எத்தனை?
17. இயேசு சிலுவையில் கூறிய வார்த்தைகள் எத்தனை?
18. படைப்பை பற்றி கூறும் நூல் எது?
19. திருத்தொண்டர்களில் கல்லெறிந்து கொல்லப்பட்டவர் யார்?
20. இயேசு உயிர்த்த நாளை கிறிஸ்தவர்கள் எவ்வாறு அழைப்பார்?

(20x2=40 புள்ளிகள்)

பகுதி II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. 1) இரண்டாம் தவணையில் உமது வகுப்பறையில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டை தருக?
    2) அக் கணிப்பீட்டால் நீர் பெற்றுக்கொண்ட நன்மைகள்?
    3) அக் கணிப்பீட்டை நிறைவேற்றுவதற்கு உமக்கு ஏற்பட்ட இடர்களை தருக?
    (3x4=12 புள்ளிகள்)

02. 1) இறைவனின் படைப்புக்களை தருக?
    2) இறைவன் மனிதனை படைத்ததற்காக யாது செய்தார்?
    3) படைப்பு மட்டில் உமது கடமை என்ன? (3x4=12 புள்ளிகள்)

03. 1) வழிப்போக்கனை சந்தித்த மனிதர்கள் யார்?
    2) வழிப்போக்கனுக்கு உதவி செய்தவர் யார்? அவர் என்ன செய்தார்?
    3) உமது வாழ்வில் மற்றவர்களுக்கு உதவி செய்த சந்தர்ப்பத்தை தருக? (3x4=12 புள்ளிகள்)

04. 1) திருமுழுக்கு யோவான் மக்களுக்கு செய்த போதனை?
    2) இயேசு திருமுழுக்கு பெற்ற நிகழ்வை தருக?
    3) திருமுழுக்கு யோவானின் வாழ்க்கையில் இருந்து நீர் கற்றுக்கொண்ட படிப்பினை யாது?
    (3x4=12 புள்ளிகள்)

05. 1) இயேசு சிலுவையில் கூறிய வார்த்தைகளைத் தருக?
    2) இயேசு சிலுவை சுமக்க உதவியவர் யார்?
    3) உமது பாவத்திற்காக மன்னிப்பு கேட்டு ஜெபம் ஒன்று எழுதுக?
    (3x4=12 புள்ளிகள்)

www.keau.lk